# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CRLMP.NO.267/2025

Deposition of Complainant side Witness examined as Pw2 Dt. 11.03.2026

| | |
|---|---|
| Name | சுவாமிநாதன் |
| Fathers Name | ராமமூர்த்தி |
| Village | மயிலாடுதுறை |
| Age | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 11.03.26

(Accused absent.)

**ம.சா.2 ன் வாக்குமூலம்**

என் மனைவி சுதா கடந்த 28.06.2021 அன்று எதிரி தர்பனாவுக்கு சொந்தமான 1318 சதுரஅடி மனை அதில் உள்ள ஓட்டு வீடு ஆகியவற்றை விலைக்கிரயமாக வாங்கி தன் பெயரில் பத்திரப்பதிவு செய்து கொண்டார். அப்போது எதிரி தர்பனாவும் அவரது கணவர் காந்தியும் அந்த இடத்திற்கு அருகாமையில் உள்ள 761 சதுரஅடி மனை மற்றும் அதில் உள்ளஓட்டு வீடு பல வருடங்களாக தங்கள் அனுபவத்தில் இருப்பதாக கூறி அதன் சர்வே எண் 549/1 எனக் குறிப்பிட்டும் அந்த இடம் நத்தம் ஜாரி இடம் என்றும், நீங்கள் வாங்கும் பட்சத்தில் எனது மனைவி சுதா பெயரில் பட்டா மாற்றம் செய்து பதிவு செய்து தருவதாக உறுதி அளித்து ரூ.5 லட்சம் விலைக்கிரயம் நிர்ணயம் செய்து அன்றைய தினமே ரூ.4 லட்சத்தை எதிரிகள் ரொக்கமாக பெற்றுக்கொண்டார்கள். மீதமுள்ள ரூ.1 லட்சத்திற்கு என் மனைவியிடம் இருந்து தர்பனா காசோலையாகவும் பெற்றுக்கொண்டார். மேற்படி இந்த உடன்படிக்கையானது ஒரு 50 ரூபாய் முத்திரைத்தாளில் அனுபோக உரிமை மாற்றம் பத்திரமாக என் மனைவி பெயருக்கு தர்பனா எழுதிக்கொடுத்தார். அந்த காசோலையையும் கடந்த 18.08.2021 அன்று தர்பனா பணமாக மாற்றிக்கொண்டார். பின்னர் மேற்படி எனது மனைவியும், நானும் பலமுறை எதிரி தர்பனாவையும், காந்தியையும்தொலைபேசி வாயிலாகவும், நேரிலும் பட்டாவை மாற்ற கோரியும் எதிரிகள் ஏதாவது ஒரு காரணம் சொல்லி காலதாமதம் செய்து வந்தனர். இதனால் சந்தேகம் அடைந்த நாங்கள் மேற்படி இடம் குறித்து விசாரிக்கும் போது எதிரிகள் குறிப்பிட்ட சர்வே எண் 549/1 என்ற இடமானது கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராணி என்பவருக்கு சொந்தமான இடம் என்பது தெரியவந்தது. மேலும் எனது மனைவிக்கு விற்ற இடமானது நத்தம் ஜாரி மனை கிடையாது என்றும் அது அரசு குளத்து புறம்போக்கு இடம் என்பதும் தெரியவந்தது. உடனே இது குறித்து கடந்த 27.10.2023 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் மனு அளித்தோம். அதன் பேரில் கடந்த 25.11.2023 அன்று மயிலாடுதுறை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளர்

முன்பு நடைபெற்ற விசாரணையில் எதிர் தரப்பில் ஆஜரான காந்தி குற்றத்தை ஒப்புக்கொண்டு மேற்கொண்டு என் மீது வழக்கு பதியவேண்டாம் நான் இந்த பணம் ரூ.5 லட்சத்தை 3 மாத காலத்திற்குள் திருப்பி கொடுத்துவிடுவேன் என ஒரு ஒப்புதல் கடிதம் காவல் ஆய்வாளர் முன்பு விசாரணையின் போது எழுதிக்கொடுத்தார். இது என்னால் வீடியோவாகவும் பதியப்பட்டுள்ளது. இந்நிலையில் 17.02.2024 அன்று மேற்படி 2வது எதிரி எழுதிக்கொடுத்த ஒப்புதல் கடிதத்தின் நகலை ஆர்டிஐ யில் தகவல் கேட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் இருந்து பெற்று வைத்துள்ளேன். தொடர்ந்து 3 மாதம் கழித்தும், எதிரி தரப்பில் இருந்து பணத்தை கொடுக்கவில்லை என்பதால் கடந்த 22.03.2024 அன்று நானும் எனது மனைவியும் மேற்படி எதிரிகள் தர்பனா மற்றும் காந்தி அவர்கள் வீட்டிற்கு காலை 10.00 மணிக்கு நேரில் சென்று அவர்களிடம் இது குறித்து கேட்கும் போது அவர்கள் இந்த பிரச்சனையை தொடர்ந்து வெளியில் கூறாதீர்கள் அந்த இடத்தை வேறு நபர்களுக்கு விற்று விட்டு உங்கள் பணத்தை கொடுத்து விடுகிறோம் என கூறினர். உடனே நான் எங்களை ஏமாற்றியது போல வேறு நபர்களையும் ஏமாற்றிதானே விற்று பணத்தை கொடுப்பீர்கள் என கேட்டதற்கு கடுங்கோபம் அடைந்த காந்தியும் தர்பனாவும் எங்களை குச்சிக்காரி, தேவுடியா மகனே என்று தகாத கெட்ட வார்த்தைகளால் திட்டி எங்களை பார்த்து வந்தாரங்குடி நாய்களே நாங்கள் இந்த பகுதியில் எவ்வளவு பெரிய ஆள் தெரியுமா என கூறி மரியாதையாக ஓடி விடுங்கள் இல்லை குடும்பத்துடன் காலி செய்து விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்தார்கள். இதனால் பயந்து போன நானும் என் மனைவியும் உடனடியாக உரிய காவல் ஆய்வாளருக்கும், மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் அன்றைய தினமே புகார் மனு அளித்தோம். அதன் பேரில் எந்த விதமான மேல் நடவடிக்கையும் இல்லாத சூழ்நிலையில் கடந்த 06.06.2024 அன்று மாண்பமை நீதி மன்றத்தை அணுகி எங்களது புகார் மனுவை விசாரிக்ககோரி ஒரு உத்தரவு பெற்றோம். அதன் பேரிலும் மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் எந்த வித விசாரணையும் எடுக்காத சூழ்நிலையில் கடந்த 05.07.2024 அன்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு மூலம் நீதிமன்றத்தில் உத்தரவினை மேற்கோள் காட்டி மயிலாடுதுறை காவல் ஆய்வாளருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் புகார் மனு அளித்தோம். அதன் பேரிலும் மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் எந்த வித விசாரணையும் எடுக்காத சூழ்நிலையில் திரும்பவும் நீதிமன்றத்தை அணுகி மறு உத்தரவு பெற்றதன் அடிப்படையில் கடந்த 02.11.2024 அன்று மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் முன்பு எங்களை விசாரணைக்கு ஆஜராகும் படி மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் முன்பு ஒரு அழைப்பாணை வந்தது. அதன்படி 02.11.2024 காலை 09.00 மணி முதல் மாலை 08.00 மணி வரை காவல் ஆய்வாளர் விசாரிப்பார் என்று எதிர்பார்த்து அங்கேயே காத்திருந்தும் எதிர் தரப்பில் இருந்து யாரும் வரவில்லை எனவே நாங்களே தொலைபேசி மூலம் உங்களை தொடர்வு கொள்வோம் அப்போது

வாருங்கள் என காவல் ஆய்வாளர் கூறிவிட்டார். அதன்பிறகு சில நாட்கள்கழித்து மாண்புமிகு நீதிமன்றத்தில் இருந்து எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் எங்களுடைய புகார் மனு கடந்த 02.11.2024 அன்று விசாரித்து முடித்து வைக்கப்பட்டதாகவும் மேல் நடவடிக்கை இல்லை என்றும், ஒரு பொய்யான தகவலை மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் தெரிவித்துள்ளார். நீதிமன்றத்தில் இருந்து எங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் எங்களுக்கு ஆட்சேபணை இருக்கும் பட்சத்தில் நேரில் ஆஜராகி உண்மை கோரலாம் என கணம் நீதிமன்றம் அவர்கள் கூறினார்கள். இவ்வாறு வேறு நபர்களுக்கு சொந்தமான இடத்தினை தங்களுடைய அனுபவத்தில் பல வருடங்களாக இருந்ததாக பொய் கூறி ஒரு போலி ஆவணம் தயார் செய்து அதன் அடிப்படையில் ரூ.5 லட்சத்தை எங்களிடம் பெற்றுக்கொண்டு மோசடி செய்து ஏமாற்றியது மட்டும் அல்லாமல் அதை கேட்ட என்னையும், எனது மனைவியையும் தகாத கெட்ட வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தமைக்கும் விசாரணை செய்து உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டி எனது மனைவி தனிப் புகார் மனு தாக்கல் செய்துள்ளார்.